# ஒலி , ஒலிபரப்புத்துறையில் முன்னேற விரும்பும் இளைஞர்கள் தமிழக வானொலி தொலைக்காட்சிகளை பார்க்கவோ, கேட்கவோ வேண்டாம்
# வி.என். மதிஅழகன் கூறுரை

**தர்மசீலன்**

**செந்தூரன்**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வி. என். மதிஅழகன் எழுதிய, **வி. என். மதிஅழகன் பேசுகிறேன்** என்ற ஊடகவியல் சார்ந்த அவருடைய மனப்பதிவுகள் அடங்கிய நூல் வெளியீட்டு விழா சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் அமைந்துள்ள நாரதகான சபா மண்டபத்தில் கடந்த (20 4 08) ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது.

இவ்விழா வினை குளோபல் தொலைக்காட்சி மற்றும் சித்தன் கலைக்கூடம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடத்தியது. மூத்த எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி தலைமையில் நடைபெற்ற விழாவில் முதல் பிரதியினை பத்மஸ்ரீ டாக்டர் நல்லிகுப்புசாமிசெட்டி அவர்கள் வெளியிட எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

முன்னதாக திருமதி எஸ். பொன்னுத்துரை திருமதி ஆனந்தலட்சுமி தர்மசீலன், திருமதி ரஞ்சனி மதியழகன், திருமதி ஞானலிங்கம், திருமதி சசி பிரதாபன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவினை தொடக்கி வைத்தார்கள். தொடர்ந்து வரவேற்புரையினை சித்தன் பிரசாத் வழங்கினார்.

இந்திரா பார்த்தசாரதி தனது தலைமையுரையில் இந்த நூலினை நான் படித்த போது இலங்கை தமிழ் வானொலி என்றாலும் மதிஅழகன் என்றாலும் ஒரே பொருள்தான் என்று தோன்றுகிறது. அந்த அளவிற்கு தம்மை அவர் அர்ப்பணித்திருக்கிறார். இந்நூலினை வாசித்து முடித்தபோது, ஒலி, ஒளிபரப்புத் துறையில் உள்ளவர்களுக்கு இந்நூல் ஒரு அரிய கையேடு ஆக ஒளிருகின்றது என்றும், பலவிதமான பன்முகங்களோடும், பரிமாணங்களோடும் அங்கு செயலாற்றியிருக்கின்றார் என்று தனது தலைமையுரையில் தெரிவித்தார்.

இலங்கையின் புகழ்பெற்ற எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை நூலாசிரியர் வி.என்.மதிஅழகனை அறிமுகப்படுத்தி பேசும்பொழுது 1996 ம் ஆண்டு சென்னை உட்லண்ட்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற

ஒரு விழாவில் நான் சொன்னேன், பத்தாயிரம் ஆண்டில் தமிழ் இலக்கியத்தை ஈழத் தமிழர்கள்தான் தலைமை தாங்கி நடத்துவார்கள் என்றும், அதற்கு காரணம் ஈழத்தமிழர்கள் கெட்டிக்காரர்கள் சிறப்பான எழுத்தாளர்கள் என்பதல்ல, முக்கியமான காரணம் தமிழ்நாட்டில் தமிழ் மெல்ல செத்துக்கொண்டிருப்பதுதான் என்று சொன்னேன். புலம்பெயர்ந்த நாடுகளில் இன்று ஒலி, ஒளிபரப்புகளை மிக நுட்பமாகவும் தமிழர் சம்பிரதாயங்களையும், விழுமியங்களையும் முன்னெடுத்துச்செல்லவேண்டும், என்று கவனம் செலுத்துகின்றனர். ஆனால் தற்போதைய காலத்தில் சிம்ரன் மாதிரி அல்லது கற்புநாயகி மாதிரியான பெண்கள் மானாட மயிலாட, மஸ்தான மஸ்தான போன்ற நிகழ்ச்சிகளில் தமிழைப் பேசி கொலை பண்ணும் வேளையில், இந்நிலைமைகளில் இருந்து தமிழைப் பாதுகாக்கும் ஒரு மேன்மையான தொண்டை தம்பி மதியழகன் செய்து கொண்டிருக்கிறார். அதுதான் அவரைப் பற்றிய முக்கியமான அறிமுகமாக நாங்கள் சொல்ல வேண்டி இருக்கிறது. இவரை நான் முன்னர் இளமைப் பருவத்தில் பார்த்திருக்கிறேன். ஒரு இருபது, இருபத்தொரு வயதிருக்கும் வானொலி நிலையத்தில் ஓடியாடித்திரிந்து வேலை பார்ப்பதை பார்த்திருக்கிறேன். ஆனால் இந்த நூலை நான் வாசித்த போது அந்த இழந்து போன 50 வருட காலத்துக்குள் நான் மீளவும் வாழக்கூடிய ஒரு சுகானுபவத்தை ஏற்படுத்தித்தந்திருக்கிறார்.

சக்திகள் அனைத்தையும் தமிழ் மக்கள் மத்தியிலே நின்று நிலவச் செய்த ஒரு ஸ்தாபனத்தைச் சேர்ந்த இன்றைய தலைமுறையின் தலைவனாக இருக்கக்கூடிய மதியழகனை உங்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

மதிஅழகன் அங்கிருந்து மட்டுமல்லாமல் புலம்பெயர்ந்த நாடுகளினுடைய கணிசமான தமிழர்கள் வாழக்கூடிய கனடா நாட்டிலே தொலைக்காட்சி, ஒலிபரப்புத்துறைகளிலே தலைமை தாங்கி முன்னெடுத்துச் செல்லுகின்றார். நீங்கள் சென்னையிலே தமிழை கொலை செய்தாலும் நாங்கள் டொரன்ரோ போன்ற நகரங்களிலே இருந்து தமிழை வளர்த்து மீட்டெடுப்போம். பின்னர் உங்களிடம் பத்திரமாக ஒப்படைப்போம் என்றும் எஸ்.பொ அவர்கள் தனது அறிமுக உரையில் தெரிவித்தார்.

கவிஞர் பேராசிரியர் பழமலய் அவர்கள தன்னுடைய நூல் ஆய்வுரையிலே பேசும்பொழுது , வானொலி, தொலைக்காட்சி என்பது இன்றைக்கு மனிதர்களுடைய வாழ்க்கையில் தவிர்க்கமுடியாத ஆளுமையை செலுத்தி வருகின்றன. ஒரு நேயர் இன்றைய காலகட்டத்தில் எந்த நிகழ்ச்சியை பார்ப்பது அல்லது கேட்பது என்ற இக்கட்டான கட்டத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். இந்த சூழலில்தான் மதியழகனைப்

போன்றவர்கள் மிகுந்த கவலையோடு சிந்திக்கிறார்கள். மதிஅழகன் இலங்கையில் இருந்தாலும் சரி கனடாவில் இருந்தாலும் சரி அவருடைய நினைப்பெல்லாம், கவனமெல்லாம் தமிழ் தமிழ் என்பதாகவே இருக்கிறது. அவர் இந்த நூலிலே தகவல்களை மிக நுட்பமாக பதிவு செய்திருக்கிறார். இன்றைக்கு தமிழ் என்பது உலக அரங்கிலே பொருளாதார மொழியாக இல்லை, அரசியல் மொழியாக இல்லை. தமிழர்கள் என்பவர்கள் இன்றைக்கு உலக அரசியலை தீர்மானிக்கிற சக்தியாக இல்லை, உலக பொருளாதாரத்தைதீர்மானிக்கிற சக்தியாகவும் இல்லை. இந்தியாவிலும் சரி இருக்கின்ற பிற நாடுகளிலும் சரி தமிழர்கள் என்பவர்கள் அல்லது தமிழ்நாடு என்பது ஒரு பெரிய அரசியல் சக்தியாக உருவாகியிருக்கவில்லை. இந்த சூழ்நிலையிலே தமிழர்கள் எந்த சக்தியுமில்லாமல் உலகத்திலே மூத்த குடிமக்களாக உயர்திணைச் செம்மொழிக்கு உரிமையுடைவர்களாக இருக்கிற தங்களை தக்கவைத்துக் கொள்வதற்கு பெரிய போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஈழத்திலே இருந்து அகதிகளாக வெளி உலகத்திற்கு பிழைக்கப் போய் இருக்கிற தமிழர்கள் நிறைய பங்கு பணியாற்றி வருகிறார்கள் தமிழுக்கு. அதனால் நம்மை விட அதாவது தாய் தமிழகத்தில் இருப்பவர்களைவிட புலம்பெயர்ந்தவர்கள் இந்த மொழியினுடைய இருப்பைக் குறித்து மிகுந்த அக்கறை செலுத்துபவர்களாக இருக்கிறார்கள். நாம் ஏதோ சந்தையில் இருப்பது போன்ற மனநிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் தங்கள் தொலைந்து போன அடையாளங்களை தேட வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறார்கள். அந்த சூழலில்தான் தமிழ் தமிழாக இருக்க வேண்டும். அதை முடிந்த வரையில் காப்பாற்ற வேண்டும் என்கிற அக்கறையோடு மதியழகன் செயல்பட்டிருக்கிறார். அவர் வானொலியில், தொலைக்காட்சியில் செயல்படுகிறபோது நமக்கெல்லாம் இல்லாத கூடுதல் சிரமம், உழைப்பு, அவருக்குத் தேவைப்படுகிறது.

இந்த நூலில் ஒரு முக்கியமான விடயத்தினை அவர் பதிவு செய்திருக்கிறார். தான் வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ ஒரு செய்தியை அறிவிக்கிற போது தன்னுடைய அம்மா பார்த்துக்கொண்டிருப்பார், தன்னுடைய உறவுக்காரர்கள் பார்த்துக்கொண்டிருப்பார்கள், தமிழர்கள் பார்த்துக்கொண்டிருப்பார்கள். எல்லாவற்றையும் மிஞ்சி தன்னைப் பெற்றெடுத்த தாய் தன்னை வளர்த்தெடுத்த தாய் தன் பிள்ளை, தமிழை எப்படி ஒலிக்கிறான், தான் சொல்லிக்கொடுத்த சொல்லினை எப்படி சரியாக உச்சரிக்கின்றானா என்றும், சரியாக சொல்லும்போது அந்த ஈழத்தாய் மனமகிழ்ச்சியடைகிறாள். தவறாக சொல்லும் போது, என்ன இப்படிச் செய்கிறானே என்று வருத்தப்படுகிறாள். ஒவ்வொரு தடவையும் செய்தியை சொல்லும் போது அதை தன்னுடைய தாய் எதிரே

இருப்பதை மறவாமல் நினைத்துக் கொள்ளுகிறார். வெறும் மதியழகனுடைய தாய் என்பது மட்டுமல்லாமல் அந்த தாயை அவர் தமிழ்த்தாயாக நினைத்துக்கொள்ளுகிறார். அதுதான் ரொம்ப குறிப்பிட்டுச்சொல்ல வேண்டிய செய்தி. என்னுடைய தாயை ஒரு சாதாரண தாயாக பார்ப்பது வேறு தமிழ்த்தாயாகப் பார்ப்பது வேறு. காசி ஆனந்தனைப் போன்றவர்கள் தந்தையை  தாயை வெறுமனே பார்ப்பதில்லை. தம்முடைய வேராக ஆணி வேராக பார்ப்பவர்கள் அதுபோலதான் மதியழகனும் பார்க்கிறார். இந்நூலில் குறிப்பிட்ட இன்னொன்றை சொல்ல வேண்டும். இந்நூல் எந்தைக்கும் தாய்க்கும், என் முந்தையர்க்கும் சமர்ப்பணம் என்று குறிப்பிடுகிறார். இந்த வேரை, மரபை ஒரு மொழியினால்தான் காப்பாற்ற முடியும். அதுதான் கடைசி அடையாளமாக மனிதனுக்கு மிஞ்சும் என்பதனாலேயே அதில் அக்கறை செலுத்த வேண்டும் என்பதும் தான் இந்த நூலினுடைய அத்தனை சொற்களும் வற்புறுத்துகிற ஒரு செய்தியாகும்.  எந்த அளவிற்கு மதியழகன் இதிலே தீவிரம் காட்டுகிறார் என்றால், வானொலி, தொலைக்காட்சியில் பொறுப்போடு வேலை செய்பவர்கள் நல்ல தமிழறிவோடு இருக்க வேண்டும் என்பது. அத்தோடு ஒரு நூலில் தகவல்களை சொல்வது எளிது ஆனால் இதில் மிகுந்த சுவையோடு சொல்லியிருக்கிறார் என்பது தான் மதியழகனுக்கு உள்ள சிறப்பு. இதையெல்லாம் சொல்கிறபோது ஏதோ செத்தவனுக்கு வெத்திலை கொடுக்கிற மாதிரி உப்புச் சப்பில்லாமல் பேசுகிற மாதிரி பேசுவதில்லை. மிக நயமாக பழமொழிகள், கதைகளை கோடிட்டுக் காட்டுவது, நிகழ்ச்சிகளை சுட்டிக்காட்டுவது, இவையெல்லாவற்றையும் மிகுந்த கவனமாக கொடுத்திருக்கின்றார் இப்புத்தகத்திலே. தூய தமிழ் சொற்கள் நமது சௌகரியத்திற்கு மடக்கிகொள்வது தவறு என்றாகாது. ஆனால் எந்த சூழ்நிலையிலே அதை சொல்கிறோம் என்பதெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படிபட்ட மிக நுணுக்கமான விபரங்களை எல்லாம் மதியழகன் இந்த நூலிலே மிக அழகாக சொல்லியிருக்கிறார். அதனால்தான் மேல்நாட்டிலே இரு இசையறிஞர் இவரை சந்தித்தபோது மதிஅழகன் நீங்கள் மதிஅழகன் மட்டுமல்ல தமிழ்அழகன் உங்களுடைய தமிழுணர்வு நீங்கள் தமிழை உச்சரிக்கும் முறை அதெல்லாம் உங்கள் மதி அழகு  என்பதை மட்டும் காட்டவில்லை. நீங்கள் தமிழில் அழகாக இருக்கிறீர்கள். தமிழின் பெருமையாக இருக்கிறீர்கள் என்று சொல்லி மனதார அந்த நிகழ்ச்சியிலே பாராட்டினாராம் என்று பேராசிரியர் பழமலய் உரையாற்றினார்.

பத்திரிகையாசிரியர் மணா தனது நூலாய்வுரையில் பேசும் பொழுது கடந்த 25 ஆண்டு காலமாக தமிழகத்தில் வெவ்வேறு அச்சு ஊடகங்களிலும் காட்சி ஊடகங்களிலும் பங்கேற்றுக் கொண்டிருக்கும் எனக்கு திரு. மதியழகன் அவர்களுடைய நூல் பல்வேறு  விதங்களில் ஒரு வழிகாட்டக்கூடிய நூலாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

அகில இந்திய வானொலி பணியாளரும் பேராசிரியருமான சித்ரா பாலசுப்பிரமணியன் தனது ஆய்வுரையிலே மதிஅழகன் அவர்கள் திட்டமிட்டே வஞ்சனை செய்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டை வைக்க நான் விரும்புகிறேன். ஏனென்றால் ஏராளமான அனுபவங்களும், ஏராளமான தகவல்களும், ஆற்றலும் நிறைந்த அவர் இந்தப் புத்தகத்தில் அதில் ஒரு துளியை மட்டும் தான் எங்களுககு கொடுத்திருக்கிறார் எனபது இப்புகத்தை பார்க்கும்போது எனக்குத் தெரிகிறது. அவருக்கு கிடைத்த வாய்ப்பு மிகப் பெரியது. எநத ஒரு ஒலிபரப்பாளருக்கும் கிடைக்க முடியாத அளவிற்கு பல்வேறு துறைகளில் அவர் தனது பணிகளைத் தொடர்ந்திருக்கிறார், இது இங்கே இருக்கும் தொலைக்காட்சி இயக்குனர் பாலரமணி, திருமதி. ஆண்டாள் பிரியதர்சினி அவர்களுக்குத் தெரியும். பல்வேறு துறை சார்ந்து ஊடகத்தில் பணியாற்றுவதென்பது சாமானியமாக கிடைக்க கூடிய விசயம் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட அனுபவங்களை எல்லாம் மிகக்குறைவான அளவிலேயே இப்புத்தகத்தில் தந்திருக்கிறாரோ என்பது எனக்கு சற்று மனவருத்தமளிக்கக்கூடியதாக இருக்கிறது. அவர் தொடர்ந்து எழுதும் போது இதை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இப்பொழுது சென்னையிலே இருக்கின்ற பண்பலை வானொலிகளை அலைவரிசைகளை மதி அண்ணா கேட்டிருக்கிறாரோ எனக்கு தெரியவில்லை. அங்கு வேலை செய்பவர்களுக்கு பத்தே வார்த்தைகள் தெரிந்திருந்தால் போதும். அதாவது ஹலோ எப்படியிருக்கீங்க. அடுத்த வீடுயோல யெஷ்ஜல யஜூ இருக்கார் இப்படியான 10 வார்த்தைகள். தத்திச் சொற்களாகவும், வழக்குச் சொற்களாகவும் சிலவற்றைத் தெரிந்து கொண்டால் போதும். நீங்கள் ஒரு ஒலிபரப்பாளராக ஆகிவிடமுடியும் அதுவும் ஸஜூதுஜெற்வி ஆக இல்லை ஊஜியீற்யஜூ ஆக. அப்படிப்பட்ட ஒரு நிலைமை தான் இன்றைக்கு நம்ம தமிழ்நாட்டில் சென்னையில் இருக்ககூடிய ஒரு விஷயம். ஒரு நல்ல கருத்தைக் கூட எவ்வளவு மோசமாக சீரளித்து விட முடியும் ஒரு வானொலி நிகழ்ச்சியின் ஊடாக. உதாரணத்துக்கு குடும்ப கட்டுப்பாடு பற்றிய ஒரு வினாடிவினா நிகழ்ச்சி இதை தொகுத்து வழங்குபவர் இப்படி பின்வருமாறு பேசுகிறார், இதப்பத்தி பேசனும்னா எனக்கு ஒரு இதுவா இருக்கு, ஆனா இதப்பத்திய கேள்விகளை ஒரு இதில்லாம கேப்பீங்க அப்படியொரு நம்பிக்கைல ஒரு இதுவாகவ நிகழ்ச்சியை நான் நடத்துறேன். இதப்பத்தின எந்த ஒரு தயக்கமும் இல்லாம எந்தவொரு இதுவும் இல்லாம நீங்க இதுவாவே கேள்வி கேட்கலாம். தான் அதுவாகவே பதில் சொல்லிடுவேன். நேயர்களுக்கு நன்றாகவே புரிந்திருக்கும். அந்த இது அது எல்லாவற்றையும் எடுத்துவிட்டால் அவர் சொல்ல விரும்பிய பெயர் சொற்கள்யென்ன வினைச்சொற்கள்யென்ன என்பது நேயர்களுக்கு நன்றாகவே புரிந்திருக்கும்.

நேயர்களை புத்தி சாலிகளாக மாற்றுவதற்கு இதுவும் ஒரு வழி. எல்லா வானொலி நிலையங்களிலும். எல்லா தொலைக்காட்சி நிலையங்களிலும் எல்லா ஊடக நிலையங்களிலும் ஒரு கையேடாக வைக்கப்படக் கூடிய அளவிற்கு உயர்தகுதி உடைய நூல் இது. ஆனால் இன்னொரு அபாயமும் இந்நூலில் இருக்கிறது. இதையெல்லாம் படித்துவிட்டு அப்படியெல்லாம் தகுதி வேண்டுமா, இத்தகுதிகள் இருந்தால்தான் ஒலி ஒளி பரப்பாளராக ஆக முடியுமா என்று நினைத்துக்கொண்டு இளைஞர்கள் ஓடி விடக்கூடிய அபாயமும் இந்நூலின் மூலமாக ஏற்படக்கூடும்.

இந்திய தேசிய தொலைக்காட்சியின் நிகழ்ச்சி நிர்வாகி பேராசிரியர் பாலரமணி தனது வாழ்த்துரையில் 1970, 80 களில் எல்லாம் என்னுடைய கிராமத்திலிருந்து உங்களுடைய குரலை எல்லாம் கேட்டுக்கேட்டுக் மகிழ்ந்திருக்கிரேன். அதற்குப் பிறகுதான் எனக்கு சென்னையிலே லயோலா கல்லூரி வாசம். உங்களோடு சில்வஸ்ரர் பாலசுப்பிரமணியம், கே. எஸ். ராஜா ராஜேஸ்வரி சண்முகம், ஆகிய அற்புதமான அறிவிப்பாளர்களையெல்லாம் நான் கேட்டுக்கேட்டு எனக்குள்ளேயே ஆசை வந்தது. நானும் வானொலியில் வரவேண்டும் என்று, அந்த ஆசை நிறைவேறியது. முதன்முதலாக டெல்லியிலிருந்து ஒளிபரப்பாகும் வெளிநாட்டு சேவையின் இயக்குனராக பணியமர்த்தப்பட்டேன். அங்கிருந்து தொலைக்காட்சியில் 25 ஆண்டுகளாக பல்வேறு பதவிகளில் இருந்துள்ளேன். இந்த நூலைப் படிக்கின்றபோது பல்வேறு நெருடல்கள ஏற்பட்டது. காரணம் அவருடைய அலைவரிசைதான் எனது அலைவரிசையும். நேயர்களுக்கும் நம்மோடு பணியாற்றுகிறவர்களுக்கும் இடையே எப்படி நாம் பாலமாக இருக்க வேண்டும் என்பதற்கு பல்வேறு இடங்களிலே நெருக்கடிகள் ஏற்படும். அந்த நெருக்கடியான நிலையிலும் கூட நிலைதடுமாறாமல் வி.என். மதியழகன் அவர்கள் இந்த நேயர்களுக்கெல்லாம் தமிழ்மொழியை. அறிவைத் தந்திருக்கிறார் என்பதுதான் இந்த நூலினுடைய சாராம்சமாக இருக்கிறது. ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. அந்த மனப்பதிவுகள் என்ற வார்த்தையே ரொம்ப சந்தோசமாக இருக்கிறது. இந்த வார்த்தை ஒரு ஆராய்ச்சி வார்த்தையாக இருக்கிறது. ஒரு நீண்ட நெடிய காலத்திற்குள் அவர் எப்படியெல்லாம் அந்த துறையிலே முன்னோடியாக வந்திருக்கிறார்கள். பணிப்பாளராக. ம்ளயநீற்மதீ ம்ஷ்ளஉம ஹுளஐளஜுயி ஆக உயர்திருக்கிறார்ரென்றால் அவருடைய தமிழ், உழைப்பு, விடாமுயற்சி என்றுதான் சொல்ல வேண்டும். அதைதான் இந்த நூல் சொல்லுகிறது. ஆனால் எங்களுக்கெல்லாம் தெரியும். தமிழ்நாட்டின் எல்லைப்புறங்களில் இருக்கும் நாம் இலங்கை வானொலியைக் கேட்டுத்தான் தமிழ்படித்தோம். சிலோன் ரேடியோவில் லோன் வாங்கிதான் அகில இந்திய வானொலி நடந்து வருகிறது. அதே பாணியை பின்பற்றுகிறது என்று சொல்ல வேண்டும். மதியழகன் போன்றவர்கள் தளமட்ட

இடங்களையெல்லாம் நாங்கள்  தடமிட்டுக் கொண்டிருக்கிற இந்த நிலைமை ரொம்ப அற்புதமாக எழுதியிருக்கிறார். மதியழகனுடைய நூலைப் பார்த்த உடனே நான் ஒன்று மட்டும் சொன்னேன். யாராரெல்லாம் தமிழுக்கு தொண்டு செய்கிறார்களோ அவர்கள் எப்போதுமே சாவதில்லை. மதியண்ணா அவர்களினுடைய எழுத்துக்கள் மட்டும் பதிவாகவில்லை. இந்த எழுத்துக்களோடு இருக்கிற இலக்கியம் எனக்கு பதிவாகிறது.  அந்த இலக்கியதோடு சம்பந்தப்பட்ட பல கருத்துக்கள் என் நெஞ்சிலே பதிவாகிறது. பாவேந்தர் சொல்கிறார். அறிவை விரிவு செய், அகண்டமாக்கு, விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை, அனைத்துக்கொள் உன்னை சங்கமமாக்கு ! மானிட சமுத்திரம் கூறு என்று பாவேந்தர் பாரதிதாசன் கூறுரைக்கிறார். இதுதான் மனப்பதிவு இதைத்தான் மதிஅழகன் அவர்கள் இங்கு எழுதியிருக்கிறார். அவர் தனது விசாலப்பார்வையால் மக்களை விழுங்கியிருக்கிறார். சங்கமமாக்கிக் கொண்டிருக்கிறார். மானட சமுத்திரம் நான் என்று இந்த நூலின் மூலம் அழகாக கூறிக் கொண்டிருக்கிறார் என்றார்.

மதியழகன் இந்நூலில் சாமர்த்தியமாகவும் எழுதியிருக்கிறார். சில அதிகாரிகளைப்பற்றி, சில அறிவிப்பாளர்களைப் பற்றி எழுதும் போது ரொம்ப சாமர்த்தியம் தெரிகிறது. இதன்போது ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. இந்தியாவில் காந்தி தலைமையில் அன்னியபொருள் எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற வேளையில் நிருபர் ஒருவர் ஜவகர்லால் நேருவிடம் போகிறார். நேரு அவர்கள் வீஷ்யுீயிள  5 சிகரெட்  குடித்துக் கொண்டிருக்கிறார், அப்போது  நிருபர் கேட்கிறார். அன்னிய பொருள் எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நீங்கள் வெளிநாட்டு சிகரெட் குடித்துக் கொண்டிருக்கிறீர்களே எனக் கேட்டபோது நேரு சொல்கிறார். நானும் அதை தீக்கிரையாக்கிக் கொண்டிருக்கிறேன் என்று. இது தான் சாமர்த்தியம் அந்த சாமர்த்தியங்கள் பிறரை காயப்படுத்துவதும் கிடையாது, ஞாயப்படுத்துவதும் கிடையாது அதே சமயத்திலே அழகாக விலகுவது என்பது தான் சாமர்த்தியம் அற்புதமாக மதியழகன் செய்திருக்கிறார். இங்கு அன்புச் சகோதரர் மதியழகன் அவர்கள் பல்வேறு பதிவுகளை, நமக்கு காட்டியிருக்கிறார்கள். அந்த வகையிலே மதியழகன் அவர்களை நாம் என்றென்றும் பாராட்ட வேண்டும். அவர்கள் நீடுபுகழ் வாழவேண்டும். அவரைப் பார்க்கின்ற போது நமக்கு பிரமிப்பை ஏற்படுத்துகின்றார். அவர் மனப்பதிவுகள் மட்டுமல்ல இலக்கியப் பதிவுகளையும் செய்ய வேண்டும் என்று சபையின் சார்பில் அவர்களை கேட்டுக்கொள்கிறேன் என்று முனைவர் பாலரமணி தனது சிறப்புரையில் தெரிவித்தார்.

தமிழ்நாட்டு நேயர்கள் இலங்கை வானொலியின் நேரத்தைக் கேட்டுதான் கடிகாரத்தை

வைத்துக்கொள்வார்கள். காலை பொங்கும் பூம்புனலைக் கேட்டுக்கொண்டுதான் காலை உணவை உட்கொள்வார்கள் என்று எழுத்தாளர் ஏ.ஏ.எச்.கே. கோறி அவர்கள் தனது சிறப்புரையில் தெரிவித்தார். மேலும் அவர் உரையாற்றுகையில் நான் அதிர்ஷ்டக்காரன் ஏனென்றால் தென்மாவட்டம், திருநெல்வேலியைச் சேர்ந்தவன் எங்களுக்கெல்லாம் இலங்கை வானொலியே சொர்க்கமாக இருந்தது. அப்படிப்பட்ட வேளையிலே இந்தக் குரலுக்குச் சொந்தமானவர்களை நாம் நேரில் சந்திக்க மாட்டோமா என்று ஏங்கியிருக்கிறேன். அந்த ஏக்கத்தை தீர்த்தது இரண்டேயிரண்டு குரல்கள் தான் ஒன்று மதியழகன், இரண்டு மனோகரி சதாசிவம் . இலங்கை வர்த்தக சேவையில் இருந்து ரூபவாஹினிக்கு புலம்பெயர்ந்த மதியழகன் அவர்கள், செய்தி வாசிக்கும் நேர்த்தியையும் அவருடைய வடிவான தோற்றத்தையும் அந்த தோற்றத்திற்கு முட்டுக் கொடுத்து காப்பாற்றிக் கொண்டிருக்கின்ற அழகான கிர்தாவையும் பார்த்து பரவசப்பட்டுக் கொண்டிருந்த லட்சக்கணக்கான இந்திய நேயர்களில் நானும் ஒருவன் என்று மேலும் தெரிவித்தார்.

விழாவின் முத்தாய்ப்பாக **என் மனப் பதிவுகளாக** தன் மனப்பதிவுகளை அழகிய நூலாக எழுதிய வி.என். மதிஅழகன் அவர்கள் ஏற்புரை வழங்கினார். அப்போது அவர் கூறியதாவது கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்திலிருந்து வருகின்ற அரசியல்வாதிகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் என பல்வேறு முக்கிய பிரமுகர்களை நாங்கள் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ்ச் சேவைக்கு அழைத்து அவர்களை பெருமை செய்திருக்கிறோம். அவர்கள் முன்னிலையிலே எனது நூல் வெளியிடப்பட வேண்டும் என்ற ஒரு மன ஆதங்கம் எனக்கு இருந்தது. அது இன்று நிறைவேறியிருக்கிறது. உங்கள் மத்தியிலே மிகவும் பிரபலமான இலக்கியவாதிகள், ஒலிபரப்பாளர்கள், ஒளிபரப்பாளர்கள் அனைவரும் இந்த மேடையை அலங்கரித்து என்னை புகழ் மொழிகளால் குளிர்வித்தார்கள். அவர்களது வாழ்த்துகளுக்கு எனது மனப்பூர்வமான நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மேடையிலே இரண்டு விடயங்கள் என்னை மிகவும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது. எனது பதும வயதிலே நான் நேசித்து போற்றி வாழ்த்தி மகிழ்ந்த **சில நேரங்களில் சில மனிதர்கள்** என்ற நூலை ஆக்கிய முற்போக்கு மற்றும் புரட்சி **எழுத்தாளர் ஜெயகாந்தன்** அவர்கள் மேடையில் நூலை பெற்றுக்கொண்டமை, என்னால் மதிக்கப்பட்ட ரசிக்கப்பட்ட எஸ்.பொ. அவர்கள் இங்கே என்னை அறிமுகம் செய்து வைத்தமையும் ஆகும்

.

தமிழ்மொழி மிகவும் அழகான மொழி. உலகத்திலே பழமைவாய்ந்த ஆறு மொழிகளிலே

தமிழ்மொழியும் ஒன்று. இந்த தமிழ் மொழியை யார் பேசினாலும் அது இனிமையாகக் கேட்பதுதான் அந்த மொழியின் சிறப்பு. இலங்கையிலே தமிழை மட்டக்களப்பு, யாழ்ப்பாண, திருகோணமலை, கொழும்பு மக்கள், பேருவளையில் வாழ்கின்ற முஸ்லீம் மக்கள் என எல்லோரும் தமிழ்தான் பேசுகிறார்கள். ஒவ்வொரு சமுகப் பிரிவினரும் பேசும்போது மிகுந்த ரசனைக்குட்பட்டதாக அமையும். சீனர்கள், ரஷ்யர்கள் தமிழ் பேசினாலும் இனிமையாகக் கேட்கும். அவர்களது பேச்சைக் கேட்டு ரசிப்பவன் நான். அவர்கள் தேவை கருதி தமிழைப் படிக்கின்றார்கள், ஒலிபரப்பு தேவைகளுக்காக. அதேபோல நாங்கள் தமிழகத்து வானொலியைக் கேட்டுத்தான் வளர்ந்தவர்கள். திருச்சி வானொலி சென்னை 1,2 என்ற வானொலி நிலையங்கள். இதில் பழைய அறிவிப்பாளர்கள் பேசுகின்ற பாங்கினை, தமிழை நாங்கள் வெகுவாக ரசித்து வளர்ந்திருக்கிறோம். சரோஜ்நாராயண சுவாமி, வெங்கட்ராமன் போன்ற பழைய கொம்பன்கள், செய்தி வாசிப்பதிலே திறமைசாலிகள். அதை நாம் வியந்து கேட்டிருக்கிறோம். அந்த நேரத்திலே இளம் ஒலிபரப்பாளர்களுக்கு நாம் சொல்லுவோம் நீங்கள் இந்திய வானொலியைக் கேளுங்கள், திருச்சி வானொலியைக் கேளுங்கள் என்று ஆலோசனைகள் வழங்குவோம். ஆனால் இப்பொழுது அண்மைக் காலத்திலே பார்க்கும் போது இளம் ஒலி, ஒளிபரப்பாளர்களுக்கு நான் சொல்லுகின்றேன், தயவு செய்து இந்திய வானொலியை, தொலைக்காட்சிகளை நீங்கள் கேட்கவோ, பார்க்கவோ வேண்டாம் என்று. அவ்வளவு தூரத்திற்கு இந்திய ஒலிபரப்பு நிலையங்களிலே பேசப்படுகின்ற வார்த்தைகளிலே ஆங்கில கலப்பு அதிகமாக இருக்கிறது. இது ஏன் என்று ஆராய்ந்து பார்த்த போது மக்களுக்கு செய்திகளை கொடுக்கும் போது அவர்களுக்கு இலகுவாக புரியவேண்டும் என்பதற்காக செய்கிறார்களாம் ஏன் இவ்வாறான நிலை, தமிழ் தேவார திருவாசகங்கள் உருவாகிய நாடு நாங்கள் மதிக்கின்ற தமிழ் அறிஞர்கள் வாழ்ந்து வந்த நாடு, தமிழை எங்களுக்கு சொல்லித்தந்த நாடு, நாங்கள் இந்திய கலைத்துவத்திற்கு உட்பட்டவர்கள், எதற்காக நாங்கள் இங்குள்ள ஒலிபரப்புகளை இலங்கையில் உள்ள ஒலிபரப்பாளர்கள் கேட்க வேண்டாம் என்று சொல்வதை தயவு செய்து இங்குள்ள பத்திரிகையாளர்கள், ஒளி ஒலிபரப்பாளர்கள், ஊடக வியலாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று இந்த சபையிலே கற்றறிந்தோர் மத்தியிலே முக்கிய செய்தியாக இன்று நான் விடுவிக்க விரும்புகின்றேன். எமது தமிழ் மொழியை பாதுகாப்பதற்கு ஊடகவியலாளர்கள் முன்வர வேண்டும். இன்று நான் மேடையிலே எதற்காக சொன்னேன் என்பதை இங்குள்ள ஒலி ஒளிபரப்பு நிலைய நிர்வாகிகள், அறிவிப்பாளர்களுக்கு பயிற்சிகளை அளிப்பவர்கள் ஒரு தடவை சிந்திக்க வேண்டும். உங்களை வழிநடத்துவதற்கு நாங்கள் வரவில்லை. நாம் உங்களது கலைத்துவத்திற்கு உட்பட்டவர்கள், உங்கள்

ஐம்பெருங்காப்பியங்கள், ராமாயணம், பாரதம் போன்ற எத்தனையோ இலக்கியங்களை தந்த மண் இவற்றையெல்லாம் வாசித்து வாசித்துதான் எங்களை நாங்கள் புடம் போட்டுக் கொண்டோம். அறிஞர் அண்ணாதுரை காலத்திலே திராவிட முன்னேற்ற கழகத்தினர் தமிழ் சீர்த்திருத்தத்தை இந்த மண்ணிலே கொண்டு வந்தார்கள். உண்மையிலே எனது பெயர்கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தொடர்புகளைக் கொண்டிருந்த எனது தந்தையார், பெரிய தந்தையாரால் வைக்கப்பட்ட பெயராக தான் இருந்தது. இலங்கையிலே மூத்த மதிஅழகன் நான்தான். எனக்கு முன்னால் மதிஅழகன் என்ற பெயர் இல்லை. ஒலிபரப்பு துறையிலே நான் இருந்த படியால் எனது பெயரால் ஈர்க்கப்பட்டு எனக்கு பின்னால் மதிஅழகன் என்ற பெயரை தங்கள் பிள்ளைகளுக்கு சூட்டினார்கள். அப்படி எனது பெயர்கூட தமிழகத்திலிருந்து வந்தது. ஒலிபரப்பு அனுபவம் கூட நான் தமிழகத்திலிருந்து பெற்றுக்கொண்டது. தமிழ் ஒலிபரப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள் மரபிலிருந்து உதித்த நான் ஒலி ஒளிபரப்புத்துறையிலே ஓரளவு ஞானம் பெற்று அனுபவம் பெற்று ஒரு விற்பன்னராக ஏனையவர்களால் அறியப்படுகிற நிலைக்கு உயர்ந்திருக்கிற நான், உலகம் ஒரு கிராமமாக மாறிவருகின்ற இந்நிலையிலே ஒன்றை மட்டும் திடமாக இந்திய மண்ணில் இருந்து ஒலி, ஒளிபரப்புதுறை ஜாம்பவான்கள் அமர்ந்துள்ள இந்த மாபெரும் சபையில் இருந்து சொல்லுகிறேன். உலகத்திலே எங்கெல்லாம் ஒலி, ஒளிபரப்பு நிலையங்கள் இருக்கின்றதோ, அங்கெல்லாம் உள்ள நிர்வாகிகளுக்கு நான் கூறுகின்றேன், தமிழக ஒலிபரப்புக்களை, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கேட்டோ, பார்த்தோ நீங்கள் பயிற்சிகளை பெறுவதற்கு அல்லது அவற்றின் வழி செல்வதற்கோ, அவற்றை முன்மாதிரியாக கொள்வதற்கோ இனிமேலும் முயல வேண்டாம் என்று இந்த இடத்தில் இருந்து நான் துணிகரமாக கூறுகின்றேன். இதனால் வருகின்ற எந்த விளைவுகளையும் எதிர்கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். எனக்கு அச்சமென்பது கிடையாது. அச்சமிருந்தால் இலங்கையில் மிகவும் இக்கட்டான கால கட்டத்தில் எல்லாம், இனக்கலவரங்கள் ஊரடங்குச் சட்டங்கள், மிகவும் துன்பகரமான காலகட்டங்கள் ஏன் 83 ம் ஆண்டு இனக் கலவரத்திலே எனது வீடு பஸ்மமாகிய பொழுதும் தளராமல் தொடர்ந்து 17 ஆண்டுகளுக்கு மேல் எனது தமிழ் பணிகளை ஆற்றி வந்திருக்கின்றேன். தமிழ்ப்பணிகளுக்காக சாகித்ய விருது பெற்ற ஒரேயொரு ஒலிபரப்பாளன் நான். அந்த அதிகாரத்தோடு சொல்லுகின்றேன், தமிழக ஒலி ஒளிபரப்புக்களை இனிமேலும் யாரும் முன்மாதிரியாக கொள்ளக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். தமிழக ஒலி ஒளிபரப்புக்களை திருத்த முடியும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் இங்கே மக்கள் தொலைக்காட்சி மட்டும் விதிவிலக்காக தமிழுக்கு சேவை செய்து வருவதை அறிந்து மனமகிழ்கிறேன் . தமிழை வளர்ப்பதற்கு ஒரு கூட்டம் ஏற்கனவே புறப்பட்டு விட்டது. அது தமிழை உலகெங்கும் காப்பாற்றும் என்று கூறிக்கொண்டு

விடைபெற்றார். அந்த வேளையிலே அரங்கத்திலே அமர்ந்திருந்தோர் பலத்த கரவொலி எழுப்பி தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

திரு. வி.என். மதிஅழகன் அவர்களினுடைய என்மனப்பதிவுகள் என்ற நூல் உலகில் உள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் உத்வேகத்தை அளிக்ககூடிய நூலாக அமைந்தது. இதன் மூலம் உலகிற்கே தமிழ் ஒலிப்பரப்பு கலையை அறிமுகம் செய்த பாரம்பரியத்தின் வழி வந்த ஒலி, ஒலிப்பரப்பாளர்கள் அனைவருமே பெருமைப்படக்கூடியதாக அமைந்துள்ளது.